








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 1 15.01.2026

வாசகர்களுக்கு வணக்கம்.

ஆசார்யர்களின் கிரந்த

முத்துக்கள்,

ஒரு வருடம் பூர்த்தியாகி,

இரண்டாவது வருட சேவையை

தொடர்கிறது.

தங்கள் ஆதரவை தொடர்ந்து தர

பிரார்த்திக்கிறோம்.










ஶ்ரீமதே ரங்கராமாநுஜாய மஹாதேசிகாய நம:

ஶ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:



ஒப்பிலியப்பன் கோயில் தெப்போத்ஸவம் 2026



# உள்ளே

படித்து

பின்பற்ற வேண்டிய முத்துக்கள்

உபதேசங்கள்

# முத்துக்கள்

**ஸ்ரீ தேஸிகன் சாதிக்கிறார்** - பரிமுகப் பெருமான் முதலில் ஆசார்-யன் அப்புள்ளார் மூலமாக எனக்கு அறிவு அளித்தான்; பின்னர், அப்புள்ளார் பரமபதம் எழுந்தருளியபின், அயிந்தையில் அவனே வந்து அனுக்ரஹம் செய்து போனான்; பின்னர், அது போதாது என்று. தானே திருமேனியுடன் என்னிடம் வந்து, கூடவே இருந்து கொண்டு. என்னுடன் கலந்து, என் மூலம் பல நூல்களை இயற்றுகிறான்.

- ❖ ஒரே இரவில் பாதுகாஸஹஸ்ரம் ஆக ஆயிரம் ஸ்லோகம் பாட வைத்தது யார்?
- ❖ எல்லா தத்வங்களையும் அறிந்துணர்த்து தத்த்வமுக்தாகலாபம் இயற்ற வைத்தது யார்?
- ❖ ஸ்ரீரங்கத்தில் வாதியரை வென்று வைஷ்ணவத்தை வேரூன்றச் செய்ய வைத்தது யார்?
- ❖ காவ்யம், நாடகம், ஸ்தோத்ரம், தர்க்கம், தமிழ்ப் பாசுரம், ரஹஸ்-யம் என்று பலவிதத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைச் செய்ய வைத்தது யார்?
- ❖ பரிமுகன் தவிர வேறு யாரால் இத்தனை செய்ய முடியும்?

சொல்லிக் கொடுத்தவர் அப்புள்ளார்; செய்ய வைப்பவர் பரிமுகப் பெருமான்; இருவரும் சேர்ந்து சாதித்த சாதனை இது என்று ஸ்வாமியே அதிகரணஸாராவளி நூலில் அருள்கிறார்.

அவர்களது கருணை நமக்கும் கிடைத்திருக்கிறது! கிடைக்க வைத்தது தேஸிகன் திருவருள்.

****************************************************************************************************

ஸ்ரீதேஸிகனது செல்வங்கள் எவை ? அவற்றைப் பெற்ற முக்கிய பபிஷ்யர்கள் யாவர்? அதைக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்; அதில் ஒரு முக்கியக் குறிப்பு உள்ளது.

- ➢ ஸ்ரீப்ரஹ்மதந்த்ர-ஸ்வதந்த்ர-ஜீயருக்கு தமது ஹயக்ரீவப் பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தார்.

ஆராதநமூர்த்-தியான வரதனை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தார்;

- ஸ்ரீநிவாஸார்யருக்கு காஞ்சி பேரருளாளன் கைங்கர்யத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார்; மேலும், உடையவர் திருவடிநிலை களையும் அவரிடம் கொடுத்து அருளினார்.
- ஸ்ரீராமபட்டாபிஷேகம் நடந்த சமயத்தில், சுக்ரீவன், விபீஷணன், அனுமன் முதலியவர்க்கு அவரவருக்கு ஏற்ற பரிசினைப் பெருமாள் கொடுத்தாராம்; அதுபோல இது அமைந்தது.

பரிமுகப் பெருமான் நான்கு ஆசார்யர்களிடம் தங்கியிருந்து அவர்கள் மூலமாக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைக் காத்து வளர்த்தான்.

1. முதலில் ஸ்ரீபாஷ்யகாரரிடம் இருந்தான்.
2. பின்னர் பிள்ளானிடம் இருந்தான்.
3. பின்னர் மெதுவாக தேஸிகனிடம் வந்து சேர்ந்தான்.
4. இப்போது ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரிடம் இருக்கிறான்.

**************************************************

